## சங்கரா பல்கலைக்கழகத்தில்

# ஆதிசங்கரர் ஜெயந்தி விழா



ஏனாத்தூர் சங்கரா பல்கலை கழகத்தில் நடந்த ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவில், சிறப்பு விருந்தினராக எம்ஜிஆர் பல்கலைக்கழக துணைவேந்தர் சுதா சேஷய்யன் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கிவைத்தார். உடன், பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.வி.ராகவன் உள்ளிட்ட பலர்.

காஞ்சிபுரம், மே 12-

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் ஜெயந்தி விழா ஏனாத்தூர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா நிகர்நிலை சங்கரா பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. காலை 7 மணி முதல் 9 மணி வரை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஒரே கல்லாலான ஆதிசங்கரரின் 70 அடி உயர திருஉருவ சிலைக்கு அபிஷேகம், சிறப்பு ஆராதனை நடைபெற்றது. இதையடுத்து மங்கள ஆரத்தி நடந்தது. நிகழ்ச்சிக்கு, பல்கலைக்கழக துணை வேந்தர் எஸ். வி.ராகவன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக துணைவேந்தர் சுதா சேஷய்யன் கலந்துகொண்டு "அத்வைதம் மற்றும் வசுதைவ குடும்பகம்" பற்றி சிறப்புரையாற்றினார். மதுரை அபங்கம் கிருஷ்ணன் மற்றும் குழுவினரால் நாமசங்கீர்தனம் நடைபெற்றது. அப்போது, பேராசிரியைகள், மாணவிகள் பாரம்பரிய கோலாட்டம் மற்றும் கும்மி நடனமாடினர். பின்னர், ஆதிசங்கரர் சிலைக்கு ஆரத்தி எடுக்கப்பட்டு, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழாவில், 200க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



ஏனாத்தூர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற, ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் ஜெயந்தி வைபவத்தில் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சுதா சேஷய்யன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் ஜெயந்தி விழா

**சென்னை**

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரின் ஜெயந்தி வைபவம் ஏனாத்தூர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹா வித்யாலயா நிகர் நிலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஒரே கல்லாலான ஆதி சங்கரரின் 70 அடி உயர திரு உருவ சிலைக்கு காலை 7 மணிக்கு அபிஷேகமும் சிறப்பு ஆராதனையும் நடைபெற்றது. 9 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் விழா தொடங்கியது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.வி.ராகவன் தலைமையேற்று தொடக்கவுரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சுதா சேஷய்யன் கலந்துகொண்டு 'அத்வைதம் மற்றும் வசுதைவ குடும்பகம்' பற்றி சிறப்புரையாற்றினார். காலை 11 மணி அளவில் மதுரை அபங்கம் கிருஷ்ணன் மற்றும் குழுவினரால் நாமசங்கீர்த்தனம் நடைபெற்றது. அப்போது பேராசிரியைகள், மாணவிகள் பாரம்பரிய கோலாட்டம் மற்றும் கும்மி நடனமாடினர். அதை தொடர்ந்து ஆரத்தி காண்பிக்கப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டது. விழாவில் 200-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.